# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 160/66 — 1975 අප්‍රේල් 24 වැනි බ්‍රහස්පතින්ද — 1975.04.24

160/66 ம் இலக்கம் — 1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I) — பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இல : தி/விக/12 — கோதுமை மா.

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் உதவி உணவு விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, திருகோணமலை பரிபாலன மாவட்டத்தின் உதவி உணவு விலைக்கப்பட்டுப்பாட்டு அதிகாரி சின்னப்பொடியன் பற்குணம் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1974 ம் ஆண்டு ஆவணி மாதம் 26 ம் திகதி வெளியான 126/3 இலக்க இலங்கைக் குடியரசு அதிவிசேஷ வர்த்தமானியில் பிரசுரமான 26.08.74 ம் திகதி கொண்ட தி/விக/10 இலக்க கோதுமை மா சம்பந்தமான உணவு விலைக் கட்டளையை எடுத்துவிடுகின்றேன் ;

(2) இதனோடு இருக்கும் 1 ம் அட்டவணையில் 2 ம் பந்தியில் குறிக்கப்பட்டிருக்கும் மொத்த நிறை 112 இருத்தலுக்குக் குறையாத விலையாகக் குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட எல்லைக்குள் இவ் விலைகளுக்குக் கூடுதலாக இத்திகதியில் இருந்து கோதுமை மாவை விற்றலாகாது ;

(3) இதனோடு இருக்கும் 2 ம் அட்டவணையில் 2 ம் பத்தியில் குறிக்கப்பட்டிருக்கும் விலையை ஒரு நிகர இருத்தல் கோதுமை மாவின் ஆகக்கூடிய சில்லறை விலையாகக் குறித்த அட்டவணையின் முதலாம் பத்தியில் விபரிக்கப்பட்ட பகுதிகளுக்குள் இவ்விலைகளுக்குக் கூடுதலாக இத்திகதியிலிருந்து கோதுமை மாவை விற்றல் ஆகாது ;

(4) இக் கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) 112 மொத்த இருத்தல் அல்லது அதற்குக் கூடிய தொகையான கோதுமை மாவை ஒரு தடவையில் அல்லது திருப்பி விற்பதற்காக விற்கும் விற்பனை மொத்த விற்பனையாகக் கருதப்படும் ;

(ஆ) 112 நிகர இருத்தல் அல்லது அதற்குக் குறைந்த தொகையான கோதுமை மாவைப் பாவனைக்காகவோ உட்கொள்வதற்காகவோ விற்றல் சில்லறை விற்பனையாகக் கருதப்படும் ;

(இ) கோதுமை மா என்னுமிடத்து கோதுமை மாவுடன் சோளம் மாவும் கலக்கப்பட்டதும் அடங்குமாறு ஆஞ்ஞையிடுகின்றேன்.

(5) இக் கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் எவராவது கோதுமை மாவுடன் சோளம் மா அல்லாத இதர பொருட்களுடன் கலந்து விற்றல் கூடாதென ஆஞ்ஞையிடுகின்றேன் ;

(6) நூற்றுக்குப் பத்து சதவிதத்திற்குக் கூடுதலாகச் சோளம் மா கலந்து கோதுமை மாவை எவரும் விற்கக் கூடாதென ஆஞ்ஞையிடுகின்றேன் ;

(7) இக் கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் நிர்ணயிக்கும் பகுதிகளில் கோதுமை மாவைத் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது அல்லது எவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் உள்ள கோதுமை மாவை இக் கட்டளையால் நிர்ணயிக்கப்பட்ட ஆகக்கூடிய விலையில் ஒரு அங்குலத்திற்குக் குறையாத உயரத்தைக் கொண்ட எண்களில் விலைகுறிப்பு அட்டைகளில் அல்லது விளம்பரப் பலகையில் பொருத்தப்பெற்றுப் பாவனையாளருக்குக் கோதுமை மாவும் ஆகக் கூடிய விலைகளும் நன்றாகத் தெரியக்கூடியதாக அக்கொள்கலத்துடன் இணைத்துப் பகிரங்க பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகின்றேன் ;

(8) இக் கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகின்றேன் ;

(9) கோதுமை மாவை விற்குமிடத்து அதைச் சுற்றிக் கொடுக்கும் அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அவைகளின் விலையும் குறிப்பிட்ட விலைகளில் அடங்குமென ஆஞ்ஞையிடுகின்றேன் ;

(1") இக கட்டளையால் ஆக்க் கூடிய விலைகள் விதிககப்பட்ட எலலைக்குள் கோதுமை மாவை மொத்தமாகவும், சிலலறையாகவும் விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் வாங்குவோர் கேட்கும் இடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிடும் பற்றுச் சீட்டொன்று வழங்கப்படவேண்டுமென்று ஆஞ்ஞையிடுகின்றேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்கப்பட்ட கோதுமை மாவின் தொகை (நிறை) ;

(இ) விற்கப்பட்ட கோதுமை மாவின் தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) விற்பனையின் தன்மை அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

1975 ம் ஆண்டு சித்திரை மாதம் 22 ம் திகதி மு. ப. 9.00 மணிக்கு திருகோணமலையில் ஒப்பமிடப்பட்டது.

சி. பற்குணம்,
உதவி (உணவு) விலைக்கட்டுப்பாட்டதிகாரி,
திருகோணமலை மாவட்டம்.

முதலாம் அட்டவணை

| பத்தி 1<br>இடப்பரப்பு | பத்தி 2<br>கோதுமை மாவின் 112 இருத்தல் மொத்த நிறைக்குக் குறையாத ஆகக் கூடிய கட்டுப்பாட்டு மொத்த விலை<br>ரூ. ச. |
|---|---|
| (1) திருகோணமலை பிராந்திய உதவி அரசாங்க அதிபரின் பிரிவிலடங்கிய திருகோணமலை பட்டணமும் குடாக்கரைப் பகுதிகளும் .. .. .. .. .. | 123 38 |
| (2) கந்தளாய் காரியாதிகாரியின் பிரிவு .. .. .. .. .. | 123 71 |
| (3) கிண்ணியா காரியாதிகாரியின் பிரிவு .. .. .. .. | 123 56 |
| (4) தம்பலகாமம் பிராந்திய உதவி அரசாங்க அதிபரின் பகுதி .. .. .. | 123 59 |
| (5) கட்டுக்குளம்பற்று கிழக்குக் காரியாதிகாரியின் பிரிவும் கட்டுக்குளம் பற்று மேற்கு பிராந்திய உதவி அரசாங்க அதிபரின் பகுதியும் .. .. .. .. .. | 123 78 |
| (6) மூதூர் சேருவில காரியாதிகாரிகளின் பகுதிகள் .. .. .. .. | 123 85 |

இரண்டாம் அட்டவணை

| பத்தி 1<br>இடப்பரப்பு | பத்தி 2<br>கோதுமை மா நிகர இருத்தல் ஒன்றின் ஆகக் கூடிய கட்டுப்பாட்டுச் சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|
| (1) திருகோணமலை பிராந்திய உதவி அரசாங்க அதிபரின் பிரிவிலடங்கிய திருகோணமலைப் பட்டணமும் குடாக் கரைப் பகுதிகளும், தம்பலகாமம் பிராந்திய உதவி அரசாங்க அதிபரின் பகுதியும், கிண்ணியா காரியாதிகாரியின் பகுதியும் .. .. .. .. .. | 1 12 |
| (2) கட்டுக்குளம் பற்று மேற்குப் பிராந்திய உதவி அரசாங்க அதிபரின் பகுதியும், கட்டுக்குளம்பற்று, கிழக்குக் காரியாதிகாரியின் பகுதியும், மூதூர் காரியாதிகாரியின் பகுதியும் .. .. .. | 1 14 |
| (3) சேருவில காரியாதிகாரியின் பகுதி .. .. .. .. .. | 1 15 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட உணவுப் பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல. இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேல் அப்பொருட்களை விற்றலாகாது.

இவ்விலக்கம் தி/வி௩/12 கொண்ட விலைக் கட்டுப்பாடும், இவற்றில் குறிப்பிட்டுள்ள விலைகளும் 1975 ம் ஆண்டு பங்குனி மாதம் 31 ம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும்.

4–556

---

விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

(173 ம் அத்தியாயம்) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம் 4 ம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் (உணவும் நானாவிதப் பொருட்களும்) விலைக்கட்டுப்பாட்டாளராகிய வில்பிரட் ஜயசூரிய ஆகிய நான் 1975.01.21 ம் திகதிய 147/62 இலக்கம் கொண்டஅதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1975 ம் ஆண்டின் 1 ம் இலக்க (சேட்டுகள்) கட்டளையை உடனடியாக நீக்கிப் பின்வருமாறு கட்டளையிடுகின்றேன்.

(1) இக்கட்டளை 1975 ம் ஆண்டின், கட்டளை இல. 2 (சேட்டுகள்) விலைகள் கட்டுப்பாட்டுக் கட்டளை என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இக்கட்டளை இலங்கை முழுவதற்கும் ஏற்புடையதாகும்.

(3) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம் நிரலிற் குறித்துரைக்கப்பட்ட விலைகள் உடனடியாக நுகர்வோருக்கான சேட் ஒன்றிற்கு சில்லறை வியாபாரியினது ஆகக்கூடிய சில்லறை விலையாதல் வேண்டும். இதற்கு மேல், இவ்வட்டவணையின் 1 ம் நிரலிலுள்ள நேரொத்த பதிவிற் குறித்துரைக்கப்பட்டுள்ள விபரத்தினைக் கொண்ட எவ்வித சேட்டுகளும் எவருக்காவது விற்பனை செய்யப் படலாகாது.

(4) இதற்குள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சேட்டுகளின் எத்தொகையும் விற்பனைக்காகத் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், அந்த சேட்டுகளின் வணிகக் குறியின் பெயரும் ஒரு அங்குலத்திற்குக் குறையாத எண்களில் இக்கட்டளையால் அத்தகைய சேட்டுகளிற்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளும் காட்டப்பட்டவொரு அறிவித்தலை வாங்குபவரால் தெளிவாகக் காணக்கூடியவாறு துலக்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

(5) இதனோடிருக்கும் அட்டவணையில் 1 ம் நிரலில் விபரிக்கப்பட்டுள்ள சேட்டுகள் எதனையும் விற்கும் ஆள் ஒவ்வொருவரும்—

(அ) விற்பனைத் திகதி ;

(ஆ) விற்கப்பட்ட சேட்டுகளின் விபரமும், தொகையும் ;

(இ) விற்கப்பட்ட சேட்டுகளின் தொகைக்கு அறவிடப்படும் விலை ;

என்பன காட்டப்பட்டுள்ள பற்றுச்சீட்டு ஒன்றினை விலைக்கு வாங்குபவருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(6) இதற்குள்ள அட்டவணையின் 1 ம் நிரலில் குறிக்கப்பட்டுள்ள சேட்டுகள் எதிலும் அதன் வியாபாரியாகத் தொழில் நடாத்தும் ஆள் ஒவ்வொருவரும் எந்த மாவட்டத்தில் தொழில் நடாத்தப்படுகின்றதோ அம்மாவட்டத்தின் பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு—

(அ) அவ் விவரத்திரட்டு தயாரிக்கப்படும் அந்நேரத்தில் தம்வசமுள்ள அல்லது தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள அத்தகைய சேட்டுகளின் கையிருப்பினையும் ;

(ஆ) அத்தகைய கையிருப்புகள் வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பண்டசாலையையும் அல்லது வேறிடத்தையும் ;

குறித்துரைக்கும் விவரத்திரட்டு ஒன்றினை 1975 ம் ஆண்டு மே மாதம் 15 ந் திகதி நண்பகல் 12 மணிக்கு பிந்தாமல் சமர்ப்பிக்க வேண்டும்.

(7) கீழ்வரும் முறைமைகளுக்கிலக்காகியுள்ள சேட்டுகளுக்கு ஏதாவது அல்லது சகல பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் சேட்டுகளுக்கு இவற்றிற்கான கலரின்பெயின்றிங் அச்சடிக்கும் செய்முறை சேட்டுகளின் மேற்பரப்பில் 50 வீதத்திற்கு குறையாது பரந்து இருப்பின் இக்கட்டளை இணங்கியதாகாது—

(அ) பட்டிக் ;

(ஆ) டை அன்ட் டை ;

(இ) திரை அச்சடித்தல்.

(8) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலை, விற்கப்படும் சேட்டைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின, அதன் விலையையும் உள்ளடக்கும்.

1975, ஏப்ரல் 23 ம் திகதி மு. ப. 9 மணிக்குக் கொழும்பில் ஒப்பமிடப்பட்டது.

வில்பிரட் ஜயசூரிய,
விலைக்கட்டுப்பாட்டாளர்,
(உணவும் நானுவிதப் பொருட்களும்)

அட்டவணை

| 1ம் நிரல் விபரம் | | 2ம் நிரல் சில்லறை வியாபாரியின் சேட் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலை | |
|---|---|---|---|
| | | ரூ. | ச. |
| (அ) சிந்தெட்டிக் நூலிழை/பருத்தி கலந்த, நீளக்கை (ஆண்கள்)சேட்—கழுத்தளவு 13½" அல்லது அதற்கு மேல் | .. | 45 | 0 |
| (ஆ) சிந்தெட்டிக் நூலிழை/பருத்தி கலந்த, அரைக்கை (ஆண்கள்) சேட்—கழுத்தளவு 13½" அல்லது அதற்கு மேல் | .. | 39 | 0 |
| (இ) சிந்தெட்டிக் நூலிழை/பருத்தி கலந்த (ஆண் பிள்ளைகள்) சேட்—கழுத்தளவு 13½" வரை .. | .. | 35 | 0 |
| (ஈ) 100% சிந்தெட்டிக் துணியிலான நீளக்கை (ஆண்கள்) சேட்—கழுத்தளவு 13½" அல்லது அதற்கு மேல் | .. | 41 | 0 |
| (உ) 100% சிந்தெட்டிக் துணியிலான அரைக்கை (ஆண்கள்) சேட்—கழுத்தளவு 13½" அல்லது அதற்கு மேல் | .. | 35 | 0 |
| (ஊ) 100% சிந்தெட்டிக் துணியிலான (ஆண் பிள்ளைகள்) சேட்—கழுத்தளவு 13½" வரை .. | .. | 31 | 0 |

4-557

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.